## தமிழ்நாட்டின் உரிமைகள் — நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தை நாள்தோறும் அதிரவைக்கும் கழக எம்.பி.க்கள்!



### கடல் சுற்றுச் சூழலுக்கும் மீனவர்களின் வாழ்வாதாரத்துக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தும்

## மன்னார் வளைகுடா ஆழ்துளை நடவடிக்கைகளைக் கைவிடுக!

### மக்களவையில் - நாடாளுமன்ற கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி வலியுறுத்தல்!

**புதுடெல்லி,மார்ச் 21-**

**மன்னார் வளைகுடாவில் ஒன்றிய அரசால் முன்மொழியப்பட்டுள்ள கடல்சார் ஆழ்துளை நடவடிக்கைகளை கைவிட வேண்டும் என இன்று (மார்ச் 19) நாடாளுமன்ற த்தில், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.**



இதுகுறித்து அவர் பேசுகையில், “பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் கீழ் உள்ள ஹைட்ரோ கார்பன் இயக்குநரகம் கடந்த 11.02.2025 அன்று பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு தொகுதிகளை ஏலம் விடுவதற்கான திறந்த பரப்பு உரிமக் கொள்கை (OALP)-ஏல சுற்று - 10 ஐ அறிமுகப்படுத்தியது.

இந்த ஏலத்தில் காவிரிப் படுகையின் ஒரு தொகுதியும் உட்படுத்தப்பட்டுள்ளது . அதனுள் மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகமும் பாக் விரிகுடா மற்றும் வாட்ஜ் கரையும் உட்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் வளைகுடா உயிர்க்கோளக் காப்பகம் பவளப்பாறைகள், கடல் புல் படுகைகள், சதுப்பு நிலங்கள், கழிமுகங்கள், சேற்றுத் தட்டையான பகுதிகள், தீவுகள் மற்றும் காடுகள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகளை உள்ளடக்கிய வளமான பல்லுயிர் பெருக்கத்தைக் கொண்டுள்ளது.

இது ராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களின் கடற்கரையிலிருந்து 560 சதுர கி.மீ தொலைவில் பரவியுள்ளது. மேலும், அருகிலுள்ள பாக் விரிகுடா பகுதி டுகோங் கடல் பசுக்களுக்கான இந்தியாவின் முதல் பாதுகாப்பு காப்பகத்தை உள்ளடக்கியது.

இந்தப் பகுதிகள் பல்லுயிர் பெருக்கம் நிறைந்தவை. இந்நிலையில் ஒன்றிய அமைச்சகத்தால் முன்மொழியப்பட்டுள்ள ஆழ்துளை எரிவாயு கிணறுகள், பல்லுயிர் பெருக்கம் நிறைந்த இந்தப் பகுதியின் சுற்றுச்சூழலையும், இந்தப் பகுதிகளில் வாழும் மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தையும் அச்சுறுத்தலுக்கு உட்படுத்துகிறது.

மேலும், சுற்றுச்சூழல் ரீதியாக உணர்திறன் வாய்ந்த இந்தப் பகுதியின் ஏலத் திட்டம் தமிழக அரசைக் கலந்தாலோசிக்காமல் செய்யப்பட்டது.

இந்தப் பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கடந்த மார்ச் 4 ஆம் தேதி பிரதமருக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். எனவே, இந்த திட்டத்தை நிறுத்தவும், அறிவிக்கப்பட்ட பல்லுயிர் வளம் மிக்க அனைத்துப் பகுதிகளையும் ஆழ்கடல் சுரங்கத்திற்கான திறந்தவெளி பரப்பு உரிமக் கொள்கையிலிருந்து நீக்கவும் கேட்டுக்கொள்கிறேன் என கனிமொழி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தியுள்ளார்.

---

### தமிழ்நாட்டில் 6 ஆண்டுகளில் – வேறு ஏதேனும் மலிவு விலை வீடு கட்டும் திட்டத்தின் கீழ்

## ஒன்றிய அரசு வீடுகட்ட நிதி ஒதுக்கியுள்ளதா?

### மக்களவையில் – டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி!

**புதுடெல்லி, மார்ச் 21-**

**பிரதமர் வீடுகள் நகர்ப்புற (PMAY-U) வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒரு யூனிட்டுக்கு நிதி உதவிக்கான ஒன்றிய அரசின் பங்கை அதிகரிக்குமா? என்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற தொகுதி எம்பி கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.**

பிரதமர் வீடுகள் நகர்ப்புற (PMAY-U) வீடு கட்டும் திட்டத்தின் கீழ் ஒரு யூனிட்டுக்கு நிதி உதவிக்கான ஒன்றிய அரசின் பங்கை அதிகரிக்குமாறு தமிழ்நாடு மாநில அரசிடமிருந்து ஒன்றிய அரசு ஏதேனும் கோரிக்கையைப் பெற்றுள்ளதா? அப்படியானால் அது தொடர்பான விவரங்கள் மற்றும் அரசின் நிலைப்பாடு என்ன?

தமிழ்நாட்டில் கடந்த ஆறு ஆண்டுகளில் PMAY-U மற்றும் வேறு ஏதேனும் மலிவு விலை வீட்டுவசதித் திட்டங்களின் கீழ் வீடுகள் கட்டுவதற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நிதியை வழங்கியுள்ளதா?

அப்படியானால் ஆண்டு வாரியாக; அதன் விவரங்கள் மற்றும் தமிழ்நாட்டிற்கான வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் வேறு ஏதேனும் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் அரசு நிதி ஒதுக்கியுள்ளதா அப்படியானால் அதன் விவரங்கள்?

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய அரசின் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் தோக்கன் சாஹு எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம்

தமிழ்நாடு அரசு சமர்ப்பித்த திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் 03.03.2025 அன்று 6.80 லட்சத்திற்கும் மேற்பட்ட வீடுகள் அனுமதிக்கப்பட்டுள்ளன இதில் ரூ.11185.30 கோடி மத்திய நிதியுதவி உறுதி செய்யப்பட்டுள்ளது. அனுமதிக்கப்பட்ட வீடுகளில் 6.61லட்சம் வீடுகள் கட்டுமானத்திற்காக தரைமட்டமாக்கப்பட்டுள்ளன; அவற்றில் 5.98 லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன/பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன மீதமுள்ளவை கட்டுமானத்தின் பல்வேறு நிலைகளில் உள்ளன.

கடந்த ஆறு ஆண்டுகளில் PMAY-U இன் கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டது. PMAY-U திட்டத்தை செயல்படுத்தியதன் 9 வருட அனுபவம் மற்றும் கற்றலின் அடிப்படையில் MoHUA இந்த திட்டத்தை புதுப்பித்து 01.09.2024 முதல் PMAY-U 2.0 ‘அனைவருக்கும் வீடு’ திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் 1 கோடி கூடுதல் தகுதியுள்ள நகர்ப்புற பயனாளிகளுக்கு நான்கு பிரிவுகள் அதாவது பயனாளிகள் தலைமையிலான கட்டுமானம் (BLC), கூட்டாண்மையில் மலிவு விலை வீடு (AHP), மலிவு விலை வாடகை வீடு (ARH) மற்றும் வட்டி மானிய திட்டம் (ISS) மூலம் உதவுகிறது. BLC, AHP மற்றும் ARH திட்டங்கள் மாநில/UT அரசாங்கங்களால் மத்திய நிதியுதவி திட்டமாக செயல்படுத்தப் படுகின்றன மேலும் ISS திட்டங்கள் தேசிய வீட்டுவசதி வங்கி (NHB), ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா (SBI) & வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுக் கழகம் (HUDCO) போன்ற அடையாளம் காணப்பட்ட ஏஜென்சிகள் மூலம் வீட்டுவசதி நிதி நிறுவனங்கள் மற்றும் முதன்மை கடன் வழங்கும் திட்ட இணக்க நிறுவனங்களால் மத்திய துறை திட்டமாக செயல்படுத்தப்படுகின்றன.



இன்றைய நிலவரப்படி தமிழ்நாடு உட்பட 30 மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்கள் திட்ட வழிகாட்டுதல்களின்படி PMAY-U 2.0 ஐ செயல்படுத்துவதற்கான ஒப்பந்தத்தில் (MoA) கையெழுத்திட்டுள்ளன. PMAY-U 2.0 இன் கீழ் 6.75 லட்சத்திற்கும் அதிகமான வீடுகளை ஒதுக்குவதற்கு ‘கொள்கையளவில்’ ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது இதில் தமிழ்நாடு மாநிலத்திற்கு 65000 வீடுகளும் அடங்கும்.

அனைத்து மாநிலங்கள் / யூனியன் பிரதேசங்களிலும் நகர்ப்புற மேம்பாட்டிற்காக MoHUA பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஸ்வச் பாரத் மிஷன் - நகர்ப்புறம் (SBM-U) கீழ் தமிழ்நாடு அரசுக்கு மொத்தம் ரூ.1144.68 கோடி மத்திய உதவி விடுவிக்கப்பட்டுள்ளது.

அடல் மிஷன் ஃபார் ரிஜுவனேஷன் அண்ட் அர்பன் டிரான்ஸ்ஃபார்மேஷன் (AMRUT) திட்டத்தின் கீழ் தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களிலும் உள்ள திட்டங்களுக்கு ரூ.35990 கோடி மத்திய உதவி உட்பட ரூ.77640 கோடி மாநில ஆண்டு செயல் திட்டங்கள் (SAAPs) அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இதுவரை நீர் வழங்கல் கழிவுநீர் மற்றும் கழிவுநீர் வடிகால் மேலாண்மை வெள்ளம் / மழை நீர் வடிகால் பசுமையான இடங்கள் & பூங்காக்கள் மற்றும் மோட்டார் பொருத்தப்படாத நகர்ப்புற போக்குவரத்து ஆகிய AMRUT திட்டங்களுக்காக ரூ.4626.24 கோடி ஒன்றிய உதவி தமிழ்நாடு அரசுக்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

AMRUT 2.0 இன் கீழ் இதுவரை தமிழ்நாடு மாநிலத்திற்கு 14687.83 கோடி (O&M உட்பட) மதிப்புள்ள 1270 திட்டங்களுக்கு மாநில நீர் செயல் திட்டங்கள் (SWAP) MoHUA ஆல் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

SBM 2.0 இன் கீழ் தமிழ்நாட்டுக்கு மிஷன் ஒதுக்கீடு 3296.70 கோடி ஆகும் அதில் ரூ.829.65 கோடி விடுவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறியுள்ளார்.

---

### ஒரு பெண் தன் வாழ்நாளில்

## ஒருமுறை மட்டுமே வாடகைத் தாயாக இருக்க முடியும்!

### டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் விளக்கம்!

**புதுடெல்லி,மார்ச் 21-**

**குழந்தைப் பேறு இல்லாதவர்களுக்கு வரமாக விளங்கும் வாடகைத் தாய்கள் சந்திக்கும் உடல் மற்றும் மன ரீதியிலான பிரச்னைகள், அவர்களுக்கு கிடைக்க வேண்டிய பண உதவிகள், பிரசவ காலம் முடிந்த பிறகான அவர்களது பிரச்சினைகள் பற்றி மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என். வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.**



இதற்கு ஒன்றிய பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை இணையமைச்சர் சாவித்திரி தாக்கூர் அளித்த பதில் வருமாறு:

வாடகைத் தாய்களின் உரிமைகள் மற்றும் பாதுகாப்புக்கென ‘வாடகைத்தாய் சட்டம் - 2021’ அமலில் இருக்கிறது. குழந்தைப் பேறு இல்லாத தம்பதிகளின் வேண்டுகோளுக்கிணங்க வாடகைத் தாயாக இருந்து குழந்தை பெற்றுக் கொடுக்கும் உன்னதமான பணியைச் செய்ய முன்வரும் ஏழைப் பெண்களை ஏமாற்றாமல், அவர்களுக்குரிய பணப்பலன் மற்றும் உடல்நலன் சார்ந்த விஷயங்களை இந்தச் சட்டம் உறுதி செய்கிறது.

புனிதமான இந்த வாடகைத் தாய் விஷயம் வியாபார மயமாக்கப்படாமல் இருக்கவும், பாதுகாப்பான மற்றும் நெறிமுறைகளுக்கு உட்பட்ட நடைமுறைகளை நாடு முழுக்க அமல்படுத்தும் வகையிலும் சட்டப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

குழந்தை பெற விரும்பும் தம்பதிகள் மற்றும் வாடகைத் தாய் ஆகியோருக்கான சட்ட ரீதியான மற்றும் மருத்துவ ரீதியான தேவைகளை இந்த சட்டத்தின் பல்வேறு பிரிவுகள் உறுதி செய்கின்றன. குழந்தையை சுமக்க ஆரம்பிக்கும் காலம் முதல் பிரசவ காலத்திற்குப் பின்பும் சுமார் 36 மாதங்கள் வாடகைத் தாய்க்கு மருத்துவக் காப்பீடு அளிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இந்த காலத்தில் அவருக்குத் தேவையான மருத்துவ உதவிகள், சிகிச்சைகள், மருத்துவ செலவுகள், பிரசவகால சிக்கல்களை சமாளித்தல், அவருக்கு ஏற்படும் இடைக்கால இழப்புகள், உயிரிழப்பு உள்ளிட்ட எல்லா வகையான விஷயங்களும் இந்தக் காப்பீட்டுக்குள் வரும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வாடகைத் தாய் சந்திக்கும் பிரச்னைகளுக்கேற்ப தகுந்த இழப்பீடு பெறும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வாடகைத்தாய்க்கு மனநலம் மற்றும் உடல்நலம் நன்றாக இருப்பதை உறுதி செய்தபின்பு, மகப்பேறு காலத்தில் எந்த சூழலில் கருக்கலைப்பு செய்யலாம்; செய்யக் கூடாது என்பதையும்; குழந்தை பிறந்த பின்பு அந்தக் குழந்தைக்கு எந்த வகையிலும் எப்போதும் உரிமை கோரக் கூடாது என்பதையும்; வாடகைத் தாய்களை ஏமாற்றும் அல்லது வஞ்சிக்கும் செயல்களுக்கு உரிய தண்டனை அளிபதையும் இந்த சட்டத்தின் பிரிவுகள் மிகத் தெளிவாக வரையறுத்துள்ளன. மிக முக்கியமாக வாடகைத் தாயாக இருக்க விரும்பும் ஒரு பெண், தன் வாழ்நாளில் ஒரு முறை மட்டுமே அப்படி இருக்க முடியும் என்பதை இந்தச் சட்டம் கட்டுப்படுத்துகிறது. இதன் மூலம் இந்த விஷயம் வணிகமயமாவது தடுக்கப்படுகிறது.

இந்த சட்டம் முறையாக அமல்படுத்தப்படுவதை மத்திய சுகாதார அமைச்சகம் தொடர்ந்து கண்காணித்து, வாடகைத் தாய்களின் உரிமைகள் மற்றும் உடல்நலன் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்கிறது.

இவ்வாறு அமைச்சர் சாவித்திரி தாக்கூர் பதிலளித்தார்.

---

### பாரம்பரிய கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும்

## சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்துள்ள முன் முயற்சிகள் என்னென்ன?

### டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி!

**புதுடெல்லி,மார்ச் 21-**

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் 17 மார்ச்;; 2025 அன்று மக்களவையி;ல், இந்திய பாரம்பரிய கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், கைவினைப் பொருட்களின் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கவும் ஒன்றிய அரசின் நடவடிக்கைகள் என்னென்ன? என்றும் அதன் விவரங்களை உறுப்பினர்களுக்கு தெரிவிக்க இயலுமா? என்று ஒன்றிய அரசின் பண்பாடு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்களிடம் விரிவான கேள்வியை எழுப்பினார்.**

ஒன்றிய அரசின் பண்பாடு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் அளித்த பதில் பின்வருமாறு :

தேசீய கைவினைப் பொருட்கள் மேம்பாட்டு திட்டம், குழும வளர்ச்சித் திட்டம் ஆகிய இரு திட்டங்களின் மூலம் கைவினை பொருட்கள் மேம்பாட்டு ஆணையாளர் அலுவலகத்தின் மூலம், கைவினை கலைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தவும், அப்பொருட்களின் சந்தை வாய்ப்புகளை அதிகரிக்கவும் தேவையான முயற்சிகள் ஒன்றிய அரசினரால் எடுக்கப்பட்டு வருகிறது என்றும், இந்தியாவிலுள்ள அனைத்து கைவினைஞர்களுக்கான திறன் மேம்பாடு, சந்தை வளர்ச்சி, நிதியுதவி,குழும வளர்ச்சி ஆகிய துறைகளில் அரசு கவனம் செலுத்தி வருகிறது என்றும், அமைச்சர் மக்களவையில் தெரிவித்தார்.



மேலும் புவிசார் குறியீட்டுச் சட்டம் 1999ன்படி கைவினைப் பொருட்களுக்கான பாதுகாப்பும் உறுதிப்பாடும் அளிக்கப்பட்டு வருகின்றது என்றும், ஜவுளித்துறை அமைச்சகத்தால் 33 இலட்சத்திற்கும் அதிகமான கைவினைஞர்களுக்கான அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது என்றும், ஒருங்கினைந்த திறன் மேம்பாட்டு திட்டம், குழு சிஷ்யா கைவினைஞர்கள் திட்டம் ஆகியவற்றின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் 81,276 கைவினைஞர்கள் பயனைடந்துள்ளனர் என்றும் 629 கைவினைஞர்களுக்கு நிதியுதவி ஒன்றிய அரசால் வழங்கப்பட்டுள்ளது என்றும் ஒன்றிய அரசின் பண்பாடு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், கஜேந்திர சிங் ஷெகாவத் அவர்கள், மக்களவையில் அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு விரிவான பதிலை அளித்துள்ளார்.

---

### அம்ரித் பாரத் திட்டத்தில்

## சைதாப்பேட்டை தொடர்வண்டி நிலையத்தினை மேம்படுத்த வேண்டும்!

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் வலியுறுத்தல்!

**புதுடெல்லி,மார்ச் 21-**

**தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் நாடாளுமன்றத்தில் விதி எண் 377-ன் கீழ் சென்னை தொடர்வண்டி திட்டங்கள் தொடர்பான கோரிக்கைகளை வலியுறுத்தினார்.**



அதன் விவரம் வருமாறு:-

சென்னை மற்றும் அதை ஒட்டிய பகுதிகளின் இலட்சக்கணக்கான பயணிகளுக்கு புறநகர் மின்சார தொடர்வண்டி சேவைகள் முக்கியமான போக்குவரத்து முறையாகும். சென்னை கடற்கரை - தாம்பரம் - செங்கல்பட்டு பிரிவில் உள்ள தொடர்வண்டி நிலையங்கள் குறிப்பிடத்தக்கவை. இங்கு அடிப்படை வசதிகள் சரிவர இல்லாமல் பயணிகள் அல்லல்படும் நேரத்தில், சென்னை கோட்டத்தின் 15 ரெயில் நிலையங்கள் அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்படும் என்ற அறிவிப்பு பெருமகிழ்ச்சியாக அமைந்தது.

கடந்த 2023-ம் ஆண்டு ஜனவரி மாதம் இந்த அறிவிப்பு வெளிவந்தது. மார்ச் மாதம் பணிகள் தொடங்கப்பட்டன, 6 மாதங்களில் பணிகளை முடிப்பதாக தென்னக இரயில்வே உறுதியளித்தது. பணியின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க ஒரு திட்ட ஆலோசகரும் நியமிக்கப்பட்டார். ஆனால் சென்னை கடற்கரை - செங்கல்பட்டு வழித்தடத்தில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் மந்தமாக நடந்து வருகிறது. பணிகளை விரைவாக முடிக்க தொடர்வண்டி அதிகாரிகள் விரைவாக செயல்பட வேண்டிய நேரம் இது.

மேலும், எப்போதும் பரபரப்பாக இயங்கும் சைதாப்பேட்டை தொடர்வண்டி நிலையம், சென்னை மெட்ரோ தொடர்வண்டி பாதைக்கு மிக அருகில் அமைந்துள்ளதால், அம்ரித் பாரத் நிலையத் திட்டத்தின் கீழ் சைதாப்பேட்டை தொடர்வண்டி நிலையத்தையும் சேர்க்க வேண்டும்.

இரயில் பெட்டிகளை உற்பத்தி செய்யும் ஐ.சி.எப். ஆனது, 5,280 பயணிகளை ஏற்றிச் செல்லும் அளவுக்கு 12 பெட்டிகளை உற்பத்தி செய்கிறது. பயணிகள் கூட்டம் அதிகமாக இருப்பதால் கூடுதலாக 12 பெட்டிகளைப் பயன்படுத்த வேண்டிய அவசியம் உள்ளது.

எனவே, சென்னை கோட்டத்தில் உள்ள 15 தொடர்வண்டி நிலையங்களிலும் மறுசீரமைப்புப் பணிகளை விரைவு படுத்தவும், பெருநகர சென்னை மற்றும் அதன் அருகிலுள்ள பகுதிகளைச் சேர்ந்த மக்களின் வசதிக்காக 12 பெட்டிகள் கொண்ட தொடர்வண்டி சேவைகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசை நான் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

---

### மீன்வளம் – மீன் வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்

## தமிழ்நாட்டின் 49 திட்டங்களின் முன்மொழிவுகளுக்கு அங்கீகாரம்!

### மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

**புதுடெல்லி, மார்ச் 21-**

**மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியின் கீழ், தமிழ்நாடு அரசின் ரூ. 715.95 கோடி மதிப்பிலான 49 திட்டங்கள் உட்பட நாடு முழுவதும் ரூ. 1943.54 கோடி மதிப்பிலான 72 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டு உள்ளதாக, திமுக எம்.பி. கிரிராஜனின் கேள்விக்கு, ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.**

மீன்பிடி உள்கட்டமைப்பு மற்றும் மீனவர் நலன் குறித்து ஒன்றிய அரசின் மீன்வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சரிடம், தமிழ்நாட்டை சேர்ந்த திமுக எம்.பி. இரா.கிரிராஜன் பல கேள்விகளை எழுப்பியிருந்தார். அந்த கேள்விகளுக்கு அத்துறையின் இணை அமைச்சர் ராஜீவ் ரஞ்சன் சிங் பதிலளித்துள்ளார்.

மீனவர்களின் தனிநபர் வருவாயை அதிகரிக்க ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா, குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்களுக்கான திட்டம் உள்ளதா, கடந்த 3 ஆண்டுகளில் மீனவர் நலனுக்கு எப்படி ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது என எம்.பி.கிரிராஜன் கேள்வி எழுப்பினார்.

அதற்கு இணை அமைச்சர் அளித்துள்ள பதிலில் குறிப்பிட்டுள்ளதாவது:

தமிழ்நாடு உள்ளிட்ட மாநிலங்களில் உள்ள மீனவர்களின் நலனுக்காக 2015 ஆம் ஆண்டு முதல் 38,572 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டு உள்ளதாகவும், மீனவர்களின் செயல்பாட்டு மூலதன தேவைகளை கருத்தில் கொண்டு 2015 முதல் 2020 வரையிலான நிதியாண்டுகளில், நீலப்புரட்சி திட்டத்தில் 3,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, 5000 கோடி ரூபாய் மொத்த முதலீட்டை திரட்ட உதவியதாகவும், 2018 முதல் 2026 வரையிலான நிதியாண்டுகளில் மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதியாக 7,522.48 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும், PMMSY திட்டத்தில் கடந்த 5 நிதியாண்டுகளில் 20050 கோடி ரூபாய் அளவுக்கஅன திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு உள்ளதாகவும், PM-MKSSY திட்டத்தில் 2023-24 முதல் 2026-27 வரை மொத்தமாக 6,000 கோடி ஒதுக்கப்பட்டதாவும், விவசாய கடன் அட்டை திட்டத்தை மீனவர்களுக்கும் விரிவுபடுத்தி உள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

இந்த திட்டங்கள் மூலம் உற்பத்தித்திறன், தரம், உள்கட்டமைப்பு, நவீனமயமாக்கல், மீன்வள மேலாண்மை, மீனவர் நலன் ஆகியவற்றில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்ய உதவிபுரிவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நிதியாண்டுகளில் மாநில அரசுகள், யூனியன் பிரதேசங்கள் செயல்படுத்தும் மீன்வள மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ரூ.15,820.23 கோடிக்கு ஒப்புதல் அளித்துள்ளதாகவும், தமிழ்நாடு அரசின் திட்டங்களுக்கு ரூ.865 கோடி அளித்துள்ளதாகவும் ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. கிசான் கிரெடிட் கார்டு எனப்படும் விவசாய கடன் அட்டை திட்டத்தில் தமிழ்நாட்டில் 49418 கார்டுகள் உள்ளிட்ட 2,86,120 KCC கார்டுகள் நாடு முழுவதும் கடந்த மூன்று ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மீன்வளம் மற்றும் மீன்வளர்ப்பு உள்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி (FIDF) திட்டத்தின் கீழ், ரூ. 1943.54 கோடி மதிப்பிலான 72 முன்மொழிவுகளுக்கு அங்கீகரிக்கப்பட்டு உள்ளதாகவும், இதில் தமிழ்நாடு அரசின் ரூ. 715.95 கோடி மதிப்பிலான 49 திட்டங்களும் அடங்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகளில், தமிழ்நாடு அரசின் முன்மொழிவுகளிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதன்படி ரூ. 127.71 கோடி மதிப்பீட்டில் பல்நோக்கு கடற்பாசி பூங்கா, சென்னை பழையார் மீன்பிடித் துறைமுகத்தை மேம்படுத்துதல், நெட்டுக்குப்பம், தாழங்குப்பம், அரங்கங்குப்பம், கூனாங்குப்பம் ஆகிய இடங்களில் ஒருங்கிணைந்த மீன் இறக்கு மையங்கள் கட்டுவதற்கான மொத்த திட்டச் செலவில் ரூ. 155.57 கோடி ஒதுக்கீடு, ரூ. 60 கோடி செலவில் பாரம்பரிய மீனவர்களுக்காக 50 புதிய ஆழ்கடல் மீன்பிடி படகுகள் வாங்குவது, ரூ. 129.27 கோடி மதிப்பிட்டில் 417 செயற்கைப் பாறைகள் நிறுவுதல் ஆகியவையும் தமிழ்நாட்டு மீனவர்கள் நலனுக்கான செயல்படுத்தப்படுவதாகவும் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

அவை தவிர தமிழ்நாட்டில் 2 மீன் குஞ்சு பொரிப்பகங்கள், 10 நன்னீர் மீன் வளர்ப்பு மையங்கள், 265 ஹெக்டேருக்கு மீன்வளர்ப்புக்கான பரப்பளவு விரிவாக்கம், 61 ஹெக்டேருக்கு புதிய மற்றும் உவர் நீர் பயோஃப்ளோக் குளங்கள், 110 ஹெக்டேருக்கு உவர்நீர் மீன் வளர்ப்பு வசதி, 102 திறந்த கடல் கூண்டுகளை நிறுவுதல், 8595 கடற்பாசி வளர்ப்பு தெப்பங்கள் அமைத்தல், கடற்பாசி வளர்ப்பதற்கான 2850 குழாய் வலை அமைத்தல், 170 அலங்கார மீன் வளர்ப்பு அலகுகள், 29 அலங்கார மீன் இனப்பெருக்க மையங்கள், 135 135 நுண்ணுயிர் மீன் வளர்ப்பு அலகுகள் உருவாக்குதல், 4 ஐஸ்க்கட்டி ஆலைகள் அல்லது குளிர்ப்பதன கிடங்குகள் கட்டுதல், 55 மீன் விற்பனை மையங்கள் உருவாக்குதல், மீன் வளர்ப்புக்கு பிந்தைய போக்குவரத்திற்கான 1540 வாகனங்களை வாங்குதல், 100 பயோ-கழிப்பறைகளை இயந்திரமயமாக்கப்பட்ட மீன்பிடிப் படகுகளில் அமைத்தல், 500 தகவல் தொடர்பு சாதனங்கள் வாங்குதல், 500 படகுகள் மற்றும் வலைகள், பாரம்பரிய மற்றும் மோட்டார் பொருத்தப்பட்ட 500 மீன்பிடி படகுகளில் மீனவர்களுக்கான பாதுகாப்பு கருவிகள் மற்றும் மீன்பிடி தடை காலத்தில் 7,56,112 பாரம்பரிய மீனவர்களுக்கான வாழ்வாதாரம் மற்றும் ஊட்டச்சத்து ஆதரவு உறுதி செய்வது ஆகியவை ஒன்றிய அரசால் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், நாட்டின் மீன்பிடி மற்றும் மீன்வளர்ப்புத் துறையின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் இத்திட்டங்கள் முக்கியப் பங்களிப்பைச் செய்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.